# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2334/39 - 2023 ජුනි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.06.01

*2334/39 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 10/2013*

**1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டு சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்ரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, மே 31.*

**ஒழுங்குவிதிகள்**

2006, நவெம்பர் 2 ஆந் திகதிய 1469/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டு சபை ஒழுங்குவிதிகள், அத்தகைய ஒழுங்குவிதிளுக்கான அட்டவணையின் விடயம் 20 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"20. (1) (அ) இதற்கான பட்டியல் 1 இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ளதும் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அப்பட்டியலின் நிரல் II மற்றும் நிரல் III இலுள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடையற்பாலனவான தகைமையளிக்கும் கட்டளைக்கற்களை நிறைவேற்றுகின்றதுமான ; அல்லது



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) இதற்கான பட்டியல் 2 இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ளதும் மற்றும் 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி(பராதீனப்படுத்தல்மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அதன் உள்நாட்டுப் பங்குவைத்திருக்கையை வெளிநாட்டு பங்குதாரருக்கு கைமாற்றுகின்றதும் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அப்பட்டியலின் நிரல் II மற்றும் நிரல் III இலுள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடையற்பாலனவான தகைமையளிக்கும் கட்டளைக்கற்களை நிறைவேற்றுகின்றதுமான,

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் சபையினால் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிராததுமான ஏலவேயுள்ள தொழில் முயற்சியொன்றுடன்அல்லது அத்தகைய சட்டத்தின் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகாரம் பெற்றுக்கொண்டுள்ள தொழில்முயற்சியொன்றுடன் அத்தகைய சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான உடன்படிக்கையொன்றைச் சபை செய்து கொள்ளலாம்.

**பட்டியல் 1**

| செயற்பாடு | தகைமையளிக்கும் கட்டளைக்கற்கள் | |
|---|---|---|
| நிரல் I | நிரல் II | நிரல் III |
| | முதலீடு | ஏற்றுமதி சதவீதம் |
| நேரடியல்லாத ஏற்றுமதிகள் உட்பட ஏற்றுமதிக்கான உற்பத்தி | (அ) 250,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமான) குறைந்தபட்ச மேலதிக முதலீடு; அத்துடன்<br>(ஆ) மேலதிக புதிய முதலீடு உட்பட மொத்த முதலீடு 500,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமான) விஞ்சுதல். | அதன் பெறலில் நூற்றுக்கு எண்பது சதவீதத்திற்கு (80%) குறையாத |
| சேவைகள் ஏற்றுமதி | (அ) 250,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமான) குறைந்தபட்ச மேலதிக முதலீடு; அத்துடன்<br>(ஆ) மேலதிக புதிய முதலீடு உட்பட மொத்த முதலீடு 500,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமான) விஞ்சுதல். | அதன் பெறலில் நூற்றுக்கு எழுபது சதவீதத்திற்கு (70%) குறையாத |
| ஹோட்டல் கைத்தொழில் | (அ) ஹோட்டல் அல்லது தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாட்டுக்காக 5,000,0000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (5 மில்லியன் ஐ.அமெ.டொ.) (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமானது) மேலதிக முதலீடு; அல்லது<br>(ஆ) குறைந்தபட்சம் 50 மேலதிக அறைகளை நிர்மாணித்தல் | - |
| கலப்பு அபிவிருத்தி | ஏதேனும் கருத்திட்டம் தொடர்புபட்டசெயற்பாட்டுக்காக 5,000,0000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (5 மில்லியன்) (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமானது) மேலதிக முதலீடு; | - |

**பட்டியல் 2**

| செயற்பாடு | தகைமையளிக்கும் கட்டளைக்கற்கள் | |
|---|---|---|
| நிரல் I | நிரல் II | நிரல் III |
| | முதலீடு | ஏற்றுமதி சதவீதம் |
| ஏற்றுமதிக்கான உற்பத்தி | பங்குப் பரிமாற்றத்தின் குறைந்தபட்ச பெறுமதி 1,000,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (1 மில்லியன் ஐ.அ.டொ.) (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமானது) | அதன் பெறலில் நூற்றுக்கு எண்பது சதவீதத்திற்கு (80%) குறையாத |

| செயற்பாடு | தகைமையளிக்கும் கட்டளைக்கற்கள் | |
|---|---|---|
| நிரல் I | நிரல் II | நிரல் III |
| | முதலீடு | ஏற்றுமதி சதவீதம் |
| நிர்மாணப்பணியின் கீழுள்ள ஹோட்டல் | பங்குப் பரிமாற்றத்தின் குறைந்தபட்ச பெறுமதி 5,000,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (5 மில்லியன் ஐ.அ.டொ.) (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமானது) | - |
| நிர்மாணப்பணியின் கீழுள்ள கலப்பு அபிவிருத்தி திட்டம் | பங்குப் பரிமாற்றத்தின் குறைந்தபட்ச பெறுமதி 5,000,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (5 மில்லியன் ஐ.அ.டொ.) (அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமானது) | - |

(2) உப விடயம் (1) இன் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கைக்கு, திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 8/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டு சபை ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 2 இன் (vi) மற்றும் (vii) ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புகள் மற்றும் திரிபாக்கல்களை சபை கூட்டிணைத்தல் வேண்டும் :

ஆயின், உடன்படிக்கையொன்றில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பந்திகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் மற்றும் திரிபாக்கல்களை கூட்டிணைத்தலானது, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் நன்மை அல்லது சிறப்புரிமையை அனுபவிப்பதில் ஏதேனும் தொழில்முயற்சியின் உரிமைக்கு பங்கமேற்படுத்துதலாகாது.

(3) உபவிடயம் (1) இன் நோக்கத்துக்காக -

(அ) முதலீடானது நிலையான சொத்துக்கள் மற்றும் வேலைப்பாட்டு மூலதனத்தின் மீது கணக்கிடப்படுதல் வேண்டும். அத்தகைய நிலையான சொத்துக்கள் கருத்திட்டக் காணிப் பெறுமதியினூடாக எதிர்கொள்ளப்படுகின்ற முன்மொழியப்பட்ட முதலீட்டின் இருபத்தைந்து சதவீதம் (25%) வரை உள்ளடக்கலாம்;

(ஆ) "நேரடியல்லாத ஏற்றுமதி" என்பது, மேலதிக செய்முறைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்காக வேறோர் திறத்தவருக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு மற்றும் வழங்கப்படுவதற்கு உட்கருதுகின்றதானபண்டங்கள் எனப் பொருள்படும்."

EOG 06-0004

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.